செய்தி வெளியீடு எண்: 048 நாள்: 20.01.2020

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 20.01.2020 இன்று நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் தமிழறிஞர்கள் 7 பேரின் நூல்கள் நாட்டுடைமையாக்கம் செய்யப்பட்டமைக்கு தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு பரிவுத்தொகை ரூபாய் 5 இலட்சம் வீதம் வழங்கப்பட்டமை**

தமிழறிஞர்களின் கருத்துக்கருவூலங்கள் உலக மக்கள் அனைவரையும் சென்றடையும் வகையில் அவர்களின் படைப்புகள் அனைத்தும் அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்குப் பரிவுத்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. அவ்வகையில் பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம், திரு.வி.க உள்ளிட்ட 149 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு ரூபாய் 11.17 கோடி பரிவுத்தொகையாக அவர்களின் மரபுரிமையர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண்– 110 இன் கீழ் 20.07.2019 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1. உளுந்தூர் பேட்டை திரு.சண்முகம், 2. கவிஞர் நா.காமராசு, 3. முனைவர் இரா. இளவரசு, 4. தமிழறிஞர் அடிகளாசிரியர், 5. புலவர் இறைக்குருவனார், 6. பண்டித ம.கோபால கிருட்டினன், 7. பாபநாசம் குறள்பித்தன் ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் குடும்பத்தினருக்கு பரிவுத்தொகையாக ரூபாய் 5 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 35 இலட்சம் வழங்கப்படும் என அறிவித்தார்கள். அவ்வறிவிப்பிற்கிணங்க இன்று 20.01.2020 நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூபாய் 5 இலட்சம் வீதம் வழங்கப்பட்டது. அவ்வகையில் தமிழ்நாடு அரசால் இதுவரை 156 பேரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு மொத்தம் 11.52 கோடி பரிவுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9